அலகு - 1 - ஒன்று

ஆராய்ச்சி நெறிமுறைகள் - 18MTA34C

[redacted]

## ஆய்வு விளக்கம் :

ஆய்வு என்பது அறிவுத்தேடலுடன் சம்பந்தப்பட்டது. ஆய்வு என்பதனைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் - Research. ஆகும். இதற்கு தேடல் எனப் பொருள் கொண்ட Re/sherach/ என்ற பிரெஞ்சு மொழிச் சொல்லின் வழி வந்ததாகக் கூறுவர். ஆய்வு என்பது, உண்மையைத் தேடுவதற்கான காலம் ஆய்வாகும். ஆய்வு - ஒருவர் இன்னது மிக்க கவனத்தோடும் விடாமுயற்சியோடும் நுட்பமாகவும் தேடுவது என்பதாகும்.

## ஆய்வு வகைகள்

① அறிவியலாய்வு - 2 இலக்கிய ஆய்வு என ஆய்வினை இரண்டாகப் பிரித்தாலும் சமூக மானிடவியல் ஆய்வுகளில் ஏற்படுகின்றவைகளில் நேர்காணல் - கள ஆய்வு முறை தேவைப்படுகிறது.

**இயற்கை ஆய்வு** - நம்மைச் சுற்றியுள்ள அம்சங்கள் பூதங்களான - நீர், காற்று மண், நெருப்பு - வானம் ஆகிய இயற்கைப் பொருள் குறித்த ஆய்வாகும்.

**பௌதிக ஆய்வு**

உயிரற்ற இயற்கைப் பொருட்களைக் கருதுவதும், இரும்பு வேதியியல் பொருட்கள் முதலிய பற்றிய ஆய்வாகும்

**சமூக ஆய்வு** - மனிதர்கள் கூடி வாழ்ந் தொடர்பினால் உருவான சமூகம் பற்றிய ஆய்வாகும்

**இலக்கிய ஆய்வு** - மேலே நாம் பார்த்த சமூக ஆய்வின் ஒரு கூறாக இலக்கியம் மொழியாலான ஒரு பகுதி. இலக்கிய ஆய்வாகும்.

அலகு

## அயல் நாகரிகம்.

பிறர் கருத்தை மேற்கோளாகச் சுட்டலாமே தவிர, அதனைத் தனது கருத்துப்போல் வெளியிடக்கூடாது. ஆய்வுத்துறையில் திருட்டு என்பது அறிவுத் திருட்டு. பிற திருட்டுக்களை விட அது கொடுமையானது. இதுவே ஆய்வு நாகரிகமாகும்.

## ஆய்வு மொழிநடை

ஆய்வேடு எழுதுவதற்கென்று ஒருவகையான மொழிநடை இருக்கிறது. ஆய்வறிக்கையின் நடை நீண்ட அமைப்பாகவும், மரபுத் தொடர்களாகவும் அமையக்கூடாது. ஆய்வாளர் சொல்ல நினைக்கிற கருத்துத் தெளிவாகப் படிப்பவருக்குப் போய்ச் சேரும்படியாக எளிய தொடர்களால் நடை அமைய வேண்டும்.

ஆய்வேட்டில் - நான், என், நாங்கள் ஆகிய தன்னிலைச் சுட்டுச் சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் சான்றாக -

நான் கருதுகிறேன் – என்னால் இயலப்பட்டது - ஆய்வாளர் கருதுகிறார் ஆய்வாளர்கள் செய்தார்கள் – முதலிய தொடர்கள் ஆய்வேட்டில் அமைதல் கூடாது.

## குறியீடு

மொழி நடைக்கு குறியீடும் தேவையானது..

① காற்புள்ளி (,) ② அரைப்புள்ளி (;) முக்காற் புள்ளி (:) முற்றுப்புள்ளி (.) வினாக்குறி [?) இடைக்கோடு [–) ~~அ...~~ ஆகிய குறியீடுகள் ஆய்வு மொழிநடைக்கு தேவையானதாகும்

## ஆய்வுப் பெயர் – ஆய்வுக்குரிய தலைப்புகள்.

ஆய்வுத்துறையில் சிறந்த கட்டுரை பெறுவது ஆய்வுத் தலைப்பாகும்.

சங்க இலக்கியம்

① சங்க கால பாடுபொருளும் - திணையும்
② சங்க இலக்கியத்தில் பருவமும் பொழுதும்
3 சங்க இலக்கியத்தில் மனிதகுல மேம்பாடு

## காப்பியம்

1 காப்பியங்கள் காட்டும் தொன்மம்
2 காப்பியங்கள் காட்டும் மனித வாழ்வு - 36 உலகியல் அணுகுமுறை
3 மணிமேகலை காட்டும் அறம்
4 தேம்பாவணியின் வருணனை
5 சிந்தாமணியில் மெய்ப்பாடுகள்

## அற நூல்கள்

(1) பொருட்பாலில் அரசியல்
2 சிறுபஞ்சமூல நீதிநூல்களில் கற்பிக்கும் நெறி

## புதினம்

(1) தமிழ் நாவல்களில் பிற்போக்குச் சிந்தனைகள்
2 பூமணியின் நாவல்களில் அடித்தள நிலை
3 பிரபஞ்சன் நாவல்களில் சமூக மாற்றங்கள்

## சிறுகதை

(1) சுதந்திரகால தமிழ்ச் சிறுகதையின் மனிதநேயம்
(2) அகிலனின் சிறுகதைகளில் சமூக சிக்கல்களும் தீர்வுகளும்
3 மலேசியச் சிறுகதைகளில் தமிழ் நாகரிகப் பின்புலம்

## வினாக்கள்

1 ஆய்வு என்றால் என்ன?
2 ஆய்வு வகைகளை குறிப்பிடுக?
3 ஆய்வு நோக்கம் - விளக்குக.
4 ஆய்வு நெறிமுறை குறித்து எழுதுக.
5

என்றாலும், ஆய்வின் ஒட்டுமொத்த நோக்கம், மனிதர்களின் அறிவுத்தேட்டம் என்ற பெரிய போராட்டத்தில் தன்னாலான பங்களிப்பைச் செலுத்துதல் என்பதுதான். அதன்மூலம் தனக்கும் தான் வாழும் சமூகத்திற்கும் நன்மை செய்து கொள்வதுதான். மனிதசமூகம் தனது நெடும் பயணத்தில் அடைந்துள்ள பல்வேறு வகைப்பட்ட முன்னேற்றங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்தவை, ஆய்வறிஞர்கள் சிலர் தங்கள் வாழ்வையே தியாகம் செய்து கண்டுபிடித்த பல ஆராய்ச்சி உண்மைகள்தான் என்பதை மறந்து விடக்கூடாது.

**ஆய்வின் வகைகள்**

ஆய்வின் வகைகளைப் பலரும் பலவிதமாக வகைப் படுத்துகின்றனர். ஆனால் எல்லாவற்றையும் உள்ளடக்குகின்ற அடிப்படை வகைகளாக இரண்டைச் சுட்டிக்காட்டலாம். இது ஆய்வுப்பொருள் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டது.

I. இயற்கை ஆய்வு
II. சமூக ஆய்வு

I. இயற்கை ஆய்வு என்பது நம்மைச் சுற்றியுள்ள ஐம்பெரும் பூதங்களான நீர், காற்று, மண், நெருப்பு, வானம் ஆகிய இயற்கைப் பொருள்கள் குறித்த ஆய்வாகும். இதையும் இரண்டு வகையாகப் பிரித்துக் கொள்ளலாம்,

1. பௌதிக ஆய்வு
2. உயிரின ஆய்வு

பௌதிக ஆய்வு என்பது உயிரற்ற இயற்கைப் பொருட்களாகக் கருதப்படும் நிலம், வேதியியல் பொருட்கள் முதலியன பற்றிய ஆய்வாகும். உயிரின ஆய்வு என்பது உயிருள்ள பொருட்களாகக் கருதப்படும் தாவரம், விலங்கு, மனிதர் ஆகியோரைப் பற்றிய ஆய்வாகும்.

II. சமூக ஆய்வு என்து மனிதர்கள் கூடி வாழத் தொடங்கியதால் உருவான சமூகம் பற்றிய ஆய்வாகும். இதில் சமூகத்தின் அலகுகளான

குடும்பம், மதம், கல்வி, பொருளாதாரம், அரசு, நீதி, கலை, இலக்கியம் முதலியன குறித்த ஆய்வுகள் அடங்கும். இப்படி ஆராயப்பட்ட சமூக ஆய்வுகளில் இருந்துதான் வரலாற்று இயல், மானுடவியல், உளவியல், பொருளாதாரவியல், இனவியல், சமயவியல், பெண்ணியம் முதலிய பல ஆய்வுத் துறைகள் உருவாகியுள்ளன.

ஆய்வை வகைப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க மற்றொரு போக்கு ஆய்வின் நோக்கம் அடிப்படையில் அமைவதாகும்.

I. தூய ஆய்வு (அல்லது) அடிப்படை ஆய்வு

II. செயல் முறை ஆய்வு

என அவை இரண்டாகும்.

**தூய ஆய்வு** என்பது ஒரு துறைக்கே உரிய அடிப்படையான விதிகளை ஆராய்ந்து நிறுவுகின்ற ஆய்வாகும். நியூட்டனின் புவிஈர்ப்பு விசை குறித்த ஆய்வு, இயற்பியல் துறையில் (Physics) தூய ஆய்வாகக் கருதத்தக்கதாகும். இலக்கியத் துறையில் எந்தவொரு இலக்கியமும் படிப்பவருக்கு அழகுணர்ச்சியை ஏற்படுத்தி இன்பம் அளிப்பதாக இருக்க வேண்டும் என வரையறுத்துக்கூறுவது தூய ஆய்வாகும். தொல்காப்பியர்,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்று ஆகும்"

(தொல்-பொருள்-27)

எனப் பொதுமைப்படப் பேசும்போது **தூய ஆய்வாக** விளங்குகிறது.

இதையே உயிர்கள் எங்கே, எப்படி, எவ்வாறெல்லாம் இன்பம் அடைகின்றன எனச் சான்றுகள் காட்டி ஆராயும்போது அது **செயல்முறை ஆய்வாகக்** கருதப்படுகிறது.

மின்சாரத்தைக் கண்டுபிடித்தது தூய ஆய்வு என்றால், அந்த மின்சாரத்தை இன்றைக்கு எப்படியெல்லாம் பயன்படுத்தக் கற்றுக் கொண்டோம் என்பது செயல்முறை ஆய்வாகும்.

## இலக்கிய ஆய்வு

இலக்கிய ஆய்வு என்பது மேலே நாம் பார்த்த சமூக ஆய்வின் ஒரு கூறாகும். இலக்கியம் மொழியாலான ஒரு படைப்பு. அதே நேரத்தில் அது ஒரு சமூக நிறுவனம். சமயம், கல்வி, குடும்பம் முதலிய சமூக நிறுவனங்கள் சமூகத்தில் எப்படியெல்லாம் இயங்குகின்றனவோ அப்படியெல்லாம் இலக்கியமும் இயங்குகின்றது. எனவே அதை நாம் சமூக நிறுவனம் என்கிறோம். இன்னும் சொல்லப்போனால் சமயம், கல்வி, குடும்பம், அரசு முதலிய சமூக நிறுவனங்கள் குறித்த கருத்தாக்கங்களை வடிவமைத்துப் பொதுமக்கள் மனத்தில் செலுத்துகின்ற மாபெரும் பணியை இலக்கியம்தான் செய்து கொண்டிருக்கிறது. எனவே இலக்கியம் என்பது நிறுவனங்களை எல்லாம் நிறுவக்கூடிய மாபெரும் நிறுவனமாகச் சமூக வாழ்வில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்படி இது ஆற்றலோடு இயங்குவதற்கு அடிப்படையாக அமைந்தது என்ன என்று பார்த்தால், மனிதர்களின் மகத்தான கண்டுபிடிப்பான மொழியினால் ஆனது இலக்கியம் என்பதுதான்.

மனித வாழ்க்கை என்பது மொழியினால் கட்டமைக்கப் படுகிறது. மொழிக்கு வெளியே மனிதர்களுக்கு வாழ்க்கை என்பது இல்லை. மனிதர்கள்தான் மொழியைக் கண்டுபிடித்தார்கள் என்பது உண்மை. ஆனால் வரலாற்றுப் போக்கில் இன்று அந்த மொழியைக் கொண்டுதான் மனிதர்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. மொழி வளர்ந்தால் மனிதர்கள் வளர்கிறார்கள். மொழி தேய்ந்தால் மனிதர்கள் தேய்கிறார்கள். இந்த உண்மையைத்தான் பாவேந்தர் பாரதிதாசனார்,

> "செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
> செயலினை மூச்சினை உனக்களித்தேனே
> **நைந்தாயெனில் நைந்து போகுமென் வாழ்வு**
> **நன்னிலை உனக்கெனில் எனக்குந்தானே"**

எனப் பாட்டாகப் பாடினார். இவ்வாறு மனித வாழ்வின் உயிராக நின்று இயங்கும் மொழியாலானது இலக்கியம் என்பதால் சமூக வாழ்வில், இலக்கியம் பெரும் பங்கு வகித்துக் கொண்டு இருக்கிறது.

9. புதிய தகவல்கள், செய்திகள், ஆய்வுக்குறிப்புகள்
10. பொருள் முரண்கள், கூற்று-அடிக்குறிப்பு முரண்கள்

இவற்றின் அடிப்படையில் கருத்துகளை விவாதிக்க அடிக்குறிப்பும் மேற்கோளும் காட்டப்பெறலாம். அடிக்குறிப்பு மேற்கோள் ஆகியவற்றை மிகுதியாகப் பயன்படுத்தல் தவறு. அணிகலன் செய்வோர் பற்றாசு இடுவது போன்றவையே அடிக்குறிப்பும் மேற்கோளும்; இவை முகத்தை மறைத்துக்கட்டப்பெறும் முண்டாசு ஆகிவிடுதல் கூடாது.

## ஆய்வு நடை

ஆய்வு நடை குறித்துப் பிறிதோரியலில் விரிவாகக் கூறுப்பெற்றுள்ளமை நினைவு கூர்க. பல ஆய்வேடுகளில் தற்செருக்குடை நடை அமைதல் இப்போது காணப்பெறுகின்றது. மறைமலை அடிகளாரின் கல்விப் பரப்பும், உ.வே.சாமிநாதையரின் உழைப்பும், சோமசுந்தரபாரதியாரின் வழக்கியலறிவும், இராகவையங்கார்களின் இலக்கியப் பயிற்சியும், வையாபுரிப்பிள்ளையின் அறிவு நுட்பமும் செருக்கான நடையைக் காட்டவில்லை.

> "இத்தலைப்பில் இதுவரையில் எவரும் ஆராய்ந்து கூறாத கருத்துக்களை இந்த ஆய்வேடு அளிக்கின்றது."

> "கலைத்துறையில் இஃது ஒரு சாதனையாகும்"

> "எவரும் காணாத புதிய ஆய்வு முடிவுகளை இந்த ஆய்வேட்டில் காண முடியும்."

என்பன போன்றவை தேவையில்லை. தங்களுக்கு அமைந்த அளவிடமுடியாத அறிவுப் பெருக்கைக் கண்டு அறிஞர் பிறர் வியக்க வேண்டுமேயன்றித் தாமே வியந்து கொளல் தேவையின்று. அதேபோன்று செய்யும் படைப்புக்குரிய பழைய மரபுக்கூறான அவையடக்கமும் ஆய்வேட்டுக்கு வேண்டுவதில்லை. மிரள்கின்ற நடையும் மிரட்டுகின்ற நடையுமின்றிக் காலாற மேய்ந்து வயிறார உண்டு மாலையில் மடிநிறைந்து கட்டுத்தறி நோக்கி மெல்லென வரும் பசுவின் நடைபோலவும், கடலிடைப்படிந்து முகந்தெழுந்து வானிற் கனத்துப் பரந்து பெய்ய நடக்கும் முகிலின் செலவு போலவும், ஆய்வு நடை அமைதல் வேண்டும். நீண்ட தொடர்கள் வேண்டுமிடத்து நீண்டமையலாம். குறுந்தொடராய் அமைய வேண்டிய இடத்துக் குறுந்தொடராய் அமையலாம். ஆனால் பிழைபடு நடை கூடாது. ஒரே பொருள் உடையன போலத் தோன்றும் சொற்களிடையே உள்ள பொருள் வேறுபாடு தெரியாத ஆட்சியைப் பல ஆய்வேடுகள் காட்டுகின்றன.

சரியான தரவுகளைத் தராத இடம் காட்ட முடியாத கற்பனையான தரவுகளைத் தருகின்ற பிழைக்கு உள்ளாகவில்லை. உயர்கல்வி பெறுதலால் ஒரு சமுகம் அடைந்துள்ள நிலைமாற்றத்தைச் சரியான தரவுகள், புள்ளிவிவரக் கணக்குகள் வழியாக இங்குக் காணலாம்''.[1]

காணமுடிகின்றது என்று எழுதுவதில் ஒரு மயக்கநடை அமைப்பு உள்ளது. காண இயலுகின்றதா, காண முடிந்துபோகின்றதா எனக் கருதுமாறு உள்ள இவ்வாட்சியைத் தவிர்க்க வேண்டும். இதேபோலச்

சொல்லப்படுகின்றது
அறியப்படுகின்றது
தெரிவிக்கப்படுகின்றது
என்றும் கருத இடமிருக்கின்றது
சொன்னாலும் பிழையில்லை
கருதத்தான் வேண்டியுள்ளது

போன்ற நடையமைப்புகளைத் தவிர்க்கலாம். ஆய்வேட்டின் நடை இலக்கணச்சூத்திர நடை போன்று அமைதல் நலம்.

குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியத் தோன்றும் ஆற்ற தென்ப.

இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும் வழி அதுவே
மனையகம் புகாஅக் காலை யான.

பகற்புணர் களனே புறனென மொழிப
அவளறி உணர வருவழியான.

இவற்றில் கூறப்பெற்றன யாவை? அகப்பொருளில் குறியென்பது இரவிலும் பகலிலும் நிகழ்வது; அவற்றுள் இரவுக்குறி என்பது வீட்டிலுள்ளவர் உரைப்பன கேட்கும் இடத்தது; பகற்குறிக்கு உரிய களமாவது மதிலின் புறத்தது ஆகும். இவ்வாறு ஒன்றை முதற்கண் தொகுத்துச் சுட்டி விளக்கம் கூறியும் பின்பு வரிசையுற ஒவ்வொன்றாய் விளக்கியும் அமைதல் நல்லதாகும்.

1. This work confidently takes charge for all the conclusions arrived. No where this has erred either by missing appropriate datas from primary sources or by adding undocumentable datas from imaginary sources. The changing phase of a society because of the higher level education it has acquired is seen with proper datas and statistical accounts.
**A study of society in changing phases** — B.R. Rao, P.138.

# ஆய்வுக்குரிய தலைப்புக்கள்

கல்லூரிகள் பலவற்றிலும் முதுகலை ஆய்வு மையங்கள் தோன்றியுள்ளன. பல்கலைக்கழகங்களிலும் ஆய்வுகள் தொடர்கின்றன. எம்.ஃபில்.பி.எச்.டி. பட்டம் பெறப் பணிமேற்கொள்வோர் எண்ணிக்கை பெருகியுள்ளது. இந்நிலையில் ஆய்வுக்குரிய தலைப்புக்களை எண்ணித் தெளிதல் வேண்டும். தலைப்பை எண்ணித் தேர்வதற்கு ஆய்வாளர்களிடம் சில அடிப்படை நிலைகள் வேண்டும். 'ஏதோ அவரவருக்குக் கிடைத்தது, தலைவிதி' என்றோ 'எந்தத் தலைப்பானால் என்ன, எழுதும்போது பார்த்துக் கொள்ளலாம்' என்றோ எண்ணுகின்ற மனப்பாங்கு ஒழிதல் வேண்டும். எழுத்தாளர் ந.பிச்சமூர்த்தி தச்சன் ஒருவன் மரச்சிற்பம் ஒன்று செய்வதற்குக் காட்டில் உரிய மரத்தைத் தேடுவதில் பல ஆண்டுகள் செலவழித்ததாக ஓர் உள்ளுறை அமைந்த கவிதையைப் புனைந்துள்ளார். அதுபோல நன்கு தலைப்பைத் தீர எண்ணித் தேர்வதற்குச் சில காலம் இடைவிடாது சிந்தித்தலே முறை. தலைப்பு என்பது சீட்டுக் குலுக்கிப் போட்டு எடுப்பதோ விரிச்சி மொழியால் கொள்வதோ அன்று. 1. நாம் முன்பே பலகால் கற்றதுறை 2. நம் ஆர்வம் பொருந்தும் பொருள் 3. துணைக்கருவிகள், நூல்கள் கிடைக்கும் வாய்ப்பு 4. நெறியாளருக்கும் அப்பொருண்மைக்கண் பயிற்சியும் ஆர்வமும் இருத்தல் ஆகிய நான்கையும் நிறைவு செய்வதாக ஆய்வுத் தலைப்பு அமைய வேண்டும். இதுகாறும் கொள்ளப்பெற்ற தலைப்புக்கள் போகச் சில தலைப்புக்கள் ஈண்டுத் துறைவாரியாக அளிக்கப்பெறுகின்றன. இவற்றை ஆய்வாளர்கள் எண்ணிப் பார்க்கலாம். இவை முனைவர்ப்பட்ட ஆய்வுக்குரியன.

## சங்க இலக்கியம்

1. சங்க இலக்கியத் தொகை முறை
2. பக்தி இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படையின் தாக்கம்
3. சங்க காலப் பேரூர்களும் சிற்றூர்களும்
4. சங்க காலப் பாடுபொருள் திறனாய்வு
5. சங்க காலக் கலைஞர் வாழ்வும் பணியும்
6. சங்க இலக்கியத்தில் கோட்பாடும் நடப்பியலும்

சங்க இலக்கியத்தில் பருவமும் பொழுதும்
7. சங்க இலக்கியத்தில் அயல்நாகரிகத் தாக்கம்
8. சங்க இலக்கியப் பின்னணியில் சங்க இலக்கியம்
9. இந்திய இலக்கியத்தில், நிலம், கடல், மக்கள் தொகை பற்றிய கருத்துகள்
10. சங்க இலக்கியத்தில் ஒலிக் கூறுகள்
11. சங்க இலக்கியத்தில் பாலியல் அணுகு நெறிகள்
12. சங்க இலக்கியத்தில் மூத்தோர்
13. சங்க இலக்கியதில் மணம்
14. சங்க இலக்கியத்தில் பரிவு
15. சங்க இலக்கியத்தில் எளிய மக்கள்
16. சங்க இலக்கியத்தில் எடுத்துரை உத்திகள்
17. அகப்பாடல்களில் தனிமனிதன் குறித்த சிந்தனைகள்
18. சங்க இலக்கியத்தில் பரிணாமக் கூறுகள்
19. சங்க இலக்கியம் காட்டும் புனைவியல்
20. சங்க இலக்கியத்தில் போர் நிகழ்ச்சிகள் - ஓர் உளவியல் அணுகுமுறை
21. சங்க இலக்கியப் புலவர் வாழ்வு
22. சங்க காலப் சமய அடிநிலைக் கூறுகள்
23. சங்க இலக்கியத்தில் உள்ளுறையும் இறைச்சியும் - ஒரு மறு ஆய்வு
24. சங்க இலக்கியத்தில் நாகரிகக் கூறுகள்
25. சங்க இலக்கியம் காட்டும் பொறியியல் மருத்துவ இயற்சிந்தனைகள்
26. சங்க இலக்கியத்தில் கருப்பொருளாய்வு
27. சங்க இலக்கியக் சிந்தனை முறைகளும் படைப்பாக்க நெறிகளும்
28. சங்க இலக்கியத்தில் வாழ்வியலில் விலங்கு, பறவைகள்
29. சங்க கால மனிதர் வாழ்வியலில் விலங்கு, பறவைகள்
30. சங்க இலக்கியத்தில் மனிதகுல மேம்பாடு

காப்பியம்

31. காப்பியக் கோட்பாடுகளும் கருத்தமைவும்
32. காப்பியப் புனைவு நெறி
33. காப்பிய மூலங்கள்
34. காப்பியங்கள் காட்டும் தொன்மம்
35. காப்பியச் சிந்தனைப் பரிணாமம்
36. காப்பியங்களில் நாடகக் கூறுகள்
37. காப்பியங்களில் முத்தமிழ்க் கூறுகள்
38. காப்பியப் பண்பு நெறிகள்
39. காப்பியங்கள் காட்டும் மனித வாழ்வு - ஒரு சமூகவியல் அணுகுமுறை
40. சிலப்பதிகாரத்தில் மரபுவழிக் கருத்துக்கள்
41. சிலப்பதிகாரத்தில் நிகழ்ச்சிக் களங்கள்
42. சிலப்பதிகாரத்தில் இரு நாகரிகக் கூறுகள்
43. சிலப்பதிகாரத்தில் பழந்தமிழ் இலக்கிய நெறிகள்

195. தலபுராணங்களில் தேவர்கள்
196. கருவூர்ப் புராணத்தில் இறையியல்
197. தலபுராணங்களில் இயற்கையிறந்த நிகழ்வுகள்
198. தலபுராணங்களில் வரலாற்றுக் கூறுகள்
199. மகாமகமும் திருக்குடந்தைக் கோயில்களும்
200. ஸ்ரீரங்க மான்மியம் கூறும் தலச்சிறப்பு
201. வேங்கடேச புராணம் கூறும் திருவேங்கடப்பெருமைகள்
202. தமிழ்த்தலபுராணங்களில் மகாபாரதம்
203. தலபுராணங்களும் நாட்டுப்புறக் கதைகளும்
204. தலபுராணங்களில் கதை கூறும் நெறி.

உரையாசிரியர்கள்

205. தொல்காப்பிய உரைவழிக் களவும் கற்பும்
206. தொல்காப்பிய உரைவழிப் பாடபேத ஆய்வு
207. அடியார்க்கு நல்லாரின் உரை நெறிகள்
208. நன்னூல் உரையாசிரியர்களின் உரை மதிப்பீடு
209. பெரியபுராண உரைகளின் மதிப்பீடு
210. திருவாய்மொழி வியாக்கியானத்தில் வைணவம்
211. சைவத் திருமுறை உரைவழிச் சித்தாந்தம்
212. திருக்குறளின் உரைகளில் மணக்குடவர் உரை
213. ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் சிலப்பதிகார உரை
214. மணிமேகலை உரைகளின் ஒப்பீட்டாய்வு
215. வை.மு.கோ.வின் கம்ப இராமயணஉரை நுட்பங்கள்
216. யாப்பருங்கல விருத்தி உரைவழி யாப்பியல்
217. புலவர் குழந்தையின் தொல்காப்பிய உரைத் திறனாய்வு
218. சேனாவரையர் உரையில் தருக்க நெறி
219. பேராசிரியரின் செய்யுளியல் உரை மதிப்பீடு
220. பொருளதிகார உரை ஒப்பீடு
221. நச்சினார்க்கினியரின் சிந்தாமணி உரை நலம்

சிற்றிலக்கியம்

222. சிற்றிலக்கியங்கள் காட்டும் இலக்கியக் கொள்கைகள்
223. பரணி நூல்களின் ஒப்பீடு
224. தூது நூல்களில் வருணனைத்திறம்
225. கலம்பக நூல்களில் உறுப்புக்களின் தோற்றமும் வளர்ச்சியும்
226. உலாநூல்களில் மனித உளவியல்
227. அந்தாதி நூல்களில் சமய நெறிகள்
228. பிள்ளைத் தமிழ் நூல்களில் பருவங்கள்